# இன்று திருநீற்றுப் புதன்

*திருவழிப்பாட்டு ஆண்டு* B *(18-02-2015)*

## *திருப்பலி முன்னுரை*

இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்! அன்புமிக்க சகோதர, சகோதரிகளே! அருளும், இரக்கமும், நீடிய பொறுமையும், பேரன்பும் நிறைந்த இயேசுவின் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று திருநீற்றுப் புதன். இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள் என்னும் ஆசீரோடும், மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள் என்னும் அறிவுறுத்தலோடும் நாம் தவக்காலத்திற்குள் அடியெடுத்து வைக்கின்றோம். இயேசுவோடு சேர்ந்து பயணிக்கவும், பாலைவன அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளவும், நம்முடைய வாழ்வைப் பசுமைப் படுத்திக் கொள்ளவும் நமக்கு ஒரு உயரிய வாய்ப்பை இத் தவக்காலம் வழங்குகின்றது.

ஒவ்வொரு கிறிஸ்தவருடைய வாழ்விலும் தவக்காலம் ஒரு வசந்த காலமாகவே அமைகின்றது. தீமைகளைக் களைந்து நம்மை புதிய திசைநோக்கி நடக்கவும், சிந்திக்கவும், செயற்படவும் வைக்கின்றது இத்தவக்காலம். எனவே வெறும் சடங்குகளுக்குள் நமது வாழ்க்கையை முடக்காது உண்மைப் பொருளுணர்ந்து இத் தவக்காலத்தை பயன்படுத்த வரம் கேட்டுச் செபிப்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**ஞானத்தின் ஊற்றே எம் இறைவா!**

நீர் கொடையாகக் கொடுத்துள்ள திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள்: இன்றைய சவால்கள் நிறைந்த உலகின் நடுவே தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருக்கும் உமது அழைப்பை சரியான முறையில் அடையாளம் கண்டு, நீர் அவர்களிடம் ஒப்படைத்துள்ள இறைமக்களை நிறையுண்மையை நோக்கி வழிநடாத்திச் செயல்படவும், உமது திருவுளம் நிறைவேற்றுவதில் அவர்கள் மகிழ்ச்சியடையவும் அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**இரக்கத்தின் நாயகனே ஆண்டவரே,**

இத்தவக்காலம் என்னும் கொடைக்காக உமக்கு நன்றி கூறுகிறோம். இந்த நாள்களில் நீர் எங்கள்மீது பொழியவிருக்கிற சிறப்பான பேரன்புக்காக, இரக்கத்துக்காக நன்றி கூறுகிறோம். இறைவா, இந்த நாள்களை நாங்கள் பலனுள்ள விதத்தில் செலவழிக்க உமது அருளை, ஆற்றலை எங்களுக்குத் தர வரம் அருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக என்ற ஆசீரோடு குடும்ப உறவை உருவாக்கிய அன்புத் தந்தையே இறைவா!**

எமது குடும்பங்களுக்காக உம்மிடம் வருகின்றோம். இன்றைய நாட்களில் குடும்ப உறவுக்கும் ஒற்றுமைக்கும் மகிழ்ச்சிக்கும் தடையாக இருக்கும் அனைத்துத் தீமைகளையும் உமது இரக்கத்தால் தகர்த்தெறிந்து குடும்பங்களில் அமைதியும் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் நிலவ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அருளும், இரக்கமும், நீடிய பொறுமையும், பேரன்பும் நிறைந்த தந்தையே!**

எங்களுடையவும், எங்களுடைய உறவுகளுடைய பாவங்களுக்காகவும் உம்மிடம் மன்னிப்புக் கேட்கின்றோம். தொடர்ந்து வரும் காலங்களில் நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் பாவ வாழ்வை வெறுத்து ஒதுக்கிவிட்டு உமக்குகந்த இறைமக்கள் சமுதாயமாக வாழவும், சாட்சியம் பகரவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**வழிகாட்டும் இறைவா!**

நாங்கள் ஒவ்வொரும் நீர் ஏற்படுத்திய திருச்சபை வழியாக நீர் வெளிப்படுத்தும் பாதைகளையும், கற்பிக்கும் உண்மை நெறிகளையும் அறிந்து அவற்றைப் பின்பற்றி, எம் ஆன்மீக வாழ்விற்கெதிராக வரும் சோதனைகளை வென்று அர்த்தமுள்ள வாழ்வு வாழ அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**எமக்கு ஆதரவளிக்கும் இறைவா!**

கடின நோய்களினால் பாதிக்கப்பட்டு வீடுகளிலும், மருத்துவ மனைகளிலிருந்தும் வேதனைப்படும் அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம். மக்களை வாட்டி வதைக்கும் எல்லா நோய்களும் அகன்று, அவர்கள் சுகமடையவும், அவர்களுடைய வேதனைகளைத் தணித்தருளவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.